**Minutes of the Public Hearing Meeting held on 30.10.2025 at 11.00 AM in M/s. Varshini Palace Thirumana Mahal, Thirumayam-Madurai Main Road, Thulaiyanur Village, Thirumayam Taluk, Pudukkottai District to establish M/s. Tmt. S. Azhagu Rough Stone Quarry with an extent of 0.61.0 Ha at S.F.Nos. 543/3A of Thulaiyanur Village, Thirumayam Taluk, Pudukkottai District.**

**Name of the Project:**

M/s. Tmt. S. Azhagu Rough Stone Quarry with an extent of 0.61.0 Ha at S.F.Nos. 543/3A of Thulaiyanur Village, Thirumayam Taluk, Pudukkottai District.

**List of Officials participated in the meeting:**

1. Selvi. B. Ishwarya,
   Revenue Divisional Officer,
   Pudukkottai.

2. Thiru. K. Selvakumar,
   District Environmental Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Pudukkottai District.

3. Thiru. B. Varatharajan,
   Tahsildar,
   Thirumayam.

4. Tmt. S.Sabitha,
   Revenue Inspector,
   Thirumayam.

5. Thiru. K. Rajagopal,
   Sub Inspector of Police,
   Thirumayam Police Station,
   Pudukkottai.

6. Thiru. M. Venkada Subramanian,
   Assistant Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Pudukkottai District

7. Thiru. D. Arunkumar
   Assistant Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Pudukkottai District.

**List of Participants related to the project:**

1. Thiru. Gobinath,
   Senior Environmental Engineer,
   Eco Tech Labs Private Limited,
   Chennai

In the public hearing, 69 persons were participated, including Government Officers, Project proponents and the general public. (Enclosed video Annexure-A).

**Welcome note given by District Environmental Engineer:**

The District Environmental Engineer, Tamil Nadu, Pollution Control Board, Pudukkottai District has welcomed the Revenue Divisional Officer, Pudukkottai who presided over the function. He welcomed the Tahsildar, Thirumayam other revenue officials and other Government officials. He also welcomed the Proprietor of M/s. Tmt. S. Azhagu Rough Stone Quarry, Project Proponent, Press, NGOs and general public who were attended the Public Hearing meeting.

He also informed that as per Ministry of Environment & Forest, New Delhi vide EIA Notification dated 14.09.2006, certain type of projects, public opinion has to be obtained before the issue of Environment Clearance. He added that the public notice informing the conducting of public hearing was published in The Dinamalar & The New Indian Express on 18.09.2025. This public hearing was conducted for M/s. Tmt. S. Azhagu Rough Stone Quarry with an extent of 0.61.0 Ha at S.F.Nos. 543/3A of Thulaiyanur Village, Thirumayam Taluk, Pudukkottai District to obtain the views of public.

He also informed that the views of public would be recorded and it would be forwarded to the State Environment Impact Assessment Authority, Chennai after getting approval from the District Collector, Pudukkottai.

District Environmental Engineer informed that M/s. Tmt. S. Azhagu Rough Stone Quarry project proponent would explain about the project after that the public could give their opinion either verbally or in writing about the project.

**Revenue Divisional Officer, Illuppur:**

She welcomed the gathering and informed that the Project Proponent would explain about their proposed project outlay and Environmental Impact Assessment study carried out through Power Point Presentation.

**Power Point Presentation by the Project Proponent:**

Thiru. Gobinath, Senior Environmental Engineer, Eco Tech Labs Private Limited, Chennai of M/s. Tmt. S. Azhagu Rough Stone Quarry has explained about the details of the project outlay, Environmental Impact Assessment report and Environmental Management Plan through Power Point Presentation. (Copy of the detail is enclosed in Annexure -B).

**District Environmental Engineer:**

The District Environmental Engineer requested the public to register their views on this project either verbally or in writing by giving their name and village details.

Followed by this, Public Hearing process started.

**1. Thiru. Subramanian, Valaiyanvayal**

He introduced himself as Subramanian from Valaiyanvayal village. He stated that they believed if this quarry is set up in this village, they will get a livelihood. All people are struggling a lot without any work. He kindly requested that a stone quarry to be established here, and he registered his supportive opinion about the project.

**2. Tmt. Jebakkani, NGO, Ramanathapuram**

She introduced herself as Jebakkani. She informed that she have come as a social activist from Ramanathapuram District. She extended her greetings to all the officials, the general public, women, and brothers and sisters who have attended this public hearing meeting. She told that this stone quarry can improve the livelihood of everyone around that village. Education, medical care, electricity, and drinking water all these facilities can greatly enhance the livelihood of the people living in that village. She further stated that she welcomes this stone quarry. She kindly requested the officials to issue the certificate to this stone quarry. She thanked and registered her support opinion about the project.

**3. Thiru. Subburamaiah, Runs NGO, Tirupati**

He started his speech by saying his name is Subburamaiah and he was a social activist from the organization called Runs NGO from Tirupati. He stated that they are looking after four states Tamil Nadu, Karnataka, and Andhra Pradesh are among the states he cover. He added that until now, they have not seen anything like this anywhere; they have not seen a meeting like this. They have attended many meetings. He further said that this M/s. Azhagu Stone Quarry is progressing very well. He want to said that the main problems are roads, air pollution, water issues, health problems, and rural development activities, if these are carried out, it will be good. He informed that, first, once in three months, a medical camp should be conducted and medicines should be provided and also it should be ensured that there are no impacts due to pollution. He further added that drinking water is very important. In that village, through the R.O filtration process, a drinking water purification plant should be set up for their benefit. A community hall should be constructed for rural development and encouraging them would be good. Similarly, pens and notebooks to be given to school childrens would be beneficial. Also, if the village near the quarry is made an example village for other villages, that would be good. He concluded his speech by saying that he request permission for this M/s. Azhagu Stone Quarry may be given soon and registered his support opinion about the project.

**4. Thiru. Sathish, NGO**

He introduced himself as Sathish and he was an Environmental Protection Secretary. He greeted the public and everyone present on this stage. He stated that he respect the customs, cultural traditions, and the sentiments. He wholeheartedly accepts the opinions and the genuine concerns raised. He added that he request the government, taking up this responsibility, to immediately allocate more funds for resolving the issues immediately and for ensuring sustainable development. Employment and job opportunities should be arranged immediately. He humbly requested the Government officials to provide permanent houses to everyone. He further said that as an environmental protection secretary, he request that this place should remain environmentally friendly and green in a sustainable manner. He requested the quarry owner to grow trees and protect them. He humbly requested the government officials to immediately grant permission to this stone quarry without imposing any restrictions. He thanked and expressed his support opinion about the project.

**5. Thiru. Muthukumar, Periyakalvayal**

He introduced himself as Muthukumar from Periyakalvayal. He stated that he comes from a poor family. He said that if this stone quarry comes, it will be helpful for them to build a house. If the stone quarry comes here and it will be convenient for them to buy soil and sand. Because, when it is brought from outside, it is brought at a very high price and it is very difficult to build a house. He further stated that, as a youngster like him is forced to go abroad to earn a living. If there is a job here, they can happily work here and support their families. He humbly requested that the stone quarry may be permitted and registered his support views for the project.

**6. Tmt. Padmadevi, Valaiyanvayal**

She introduced herself as Padmadevi from Valaiyanvayal village. She stated that her husband has supported their family from the beginning by the stone quarry. Now, due to their circumstances, her family struggling so much that they are unable to pay their childrens school fees. She humbly requested that permission shall be granted to the stone quarry and registered her support opinion for the project.

**7. Tmt. Azhagammal, Valaiyanvayal**

She introduced herself as Azhagammal from Valaiyanvayal. She said that only because of the stone quarry and by working there that she survived after her husband passed away. She added that they have been making a living only by working in the stone quarry. The quarry has been stopped, for the past seven or eight months and they are struggling a lot, facing great difficulties. All the childrens are struggling. She is struggling with her dumb daughter. She said that only if they are given some work they can survive and there is no other way. She further stated that if this quarry is permitted only, they can build a house, whether it is for sand or for stone and they still have not built a house and also they are very poor. She concluded her speech by saying that whatever efforts the officials, please take and permit the stone quarry for us and expressed her support opinion about the project.

**8. Thiru. Muthusamy, Parali**

He introduced himself as Muthusamy from Parali. He stated that there are 20 villages surrounding our village. If this quarry is started, about 200 people from these 20 villages will get employment oppurtunity. Similarly, around their village and Thulayanur, there are ten more villages and all of them have lorries. Now, without a quarry, all these lorries are simply standing idle. So, if this quarry is started, everyone will get a livelihood. He added that in this area, there is not a single crusher. They have to go a long distance 30 Kilometers to buy jelly and sand. If a quarry is established in this place, crushers can also function and everyone will get a livelihood. Therefore, we need this stone quarry and registered his support opinion about the project.

**9. Thiru. Ajrath, NGO**

He introduced himself as Ajrath, as social activist. He stated that permission should be granted for this stone quarry and he registered his support opinion for the project.

**10. Tmt. Gandhi, Thulaiyanur**

She introduced herself as Gandhi from Thulayanur. She stated that she was running a tea shop. When she was running the shop, many people used to come and her economic situation was good. She added that good customers were regularly coming to the shop. Now, because there is no stone quarry and she was

unable to run the shop. All the people have fallen into great difficulty. She informed that if you support the operation of the stone quarry, they will be thankful and expressed her support opinion about the project.

**11. Thiru. Ramasamy, Konapattu**

He started his speech by saying that greetings to the Revenue Divisional Officer who is present here and his name is Ramasamy from Konapattu village. He stated that, since the year 2005, for 17 years, he has been supporting his family only by working in stone quarries and crushers. Now, for the past ten or eleven months, his livelihood has been severely affected due to non operation of stone quarries in Thulayanur Panchayat. He added that the officials to consider the feelings of the general public of Thirumayam, and because many people in Thulayanur Panchayat, Kalluvayal, Valaiyavayal, Konapattu, Vengalur, and about 15 surrounding villages are living below the poverty line. It is only through this stone quarry that everyone has been able to improve their livelihoods. Now, without any work, they have been pushed to the very bottom line. Crushers are not operating. Further he added that the stone quarries are not functioning here and the livelihoods of nearly 250 to 300 families have been greatly affected. He humbly requested that permission shall be granted to the stone quarry owners to establish the quarry and expressed his support opinion for the project.

**12. Thiru. Muthumaran, Valaiyanvayal**

He introduced himself as Muthuraman from Valaiyanvayal. He stated that he did not have a job. He added that because there is no quarry work, they have no job opportunities, and they are struggling a lot and also they do not even have a way to drink a cup of tea. Therefore, they have no objection to operate the stone quarry. He thanked and registered his support opinion about the project.

**13. Tmt. Parvathi, Thulaiyanur**

She introduced herself as Parvathi from Thulayanur village. She stated that she believed if this stone quarry operates, definitely all the people in the surrounding areas will get more benefit and requested that the stone quarry shall be permitted and expressed her support opinion about the project.

**14. Thiru. Ramachandran, Samathuvapuram**

He introduced himself as Ramachandran from Samathuvapuram. He stated that nearly 40 families are depending on this quarry and they are in great difficulty. He sincerely requested the District Collector Madam to kindly grant permission for it. He thanked and registered his support views for the project.

**15. Thiru. S.S. Mani, Periyar Samathuvapuram**

He introduced himself as S.S.Mani from Periyar Samathuvapuram. He stated that he run a hotel at Samathuvapuram. There is no stone quarry in their area and the hotel business has been mostly affected. He kindly requested that permission shall be granted for the stone quarry and expressed his support opinion about the project.

**District Environmental Engineer**

After that no one has expressed their opinions about the project. Then, the District Environmental Engineer addressed the public, that this public hearing meeting was being held specifically to register their opinions. Therefore, the District Environmental Engineer requested the public to register their views. Even after this, no one came forward to express their opinions. Then he said that the public hearing meeting was closed as no one from the public came forwarded to say their opinion.

**Vote of Thanks:**

The District Environmental Engineer has informed that the public could submit their comments in writing at the office of the District Collector or the Tamil Nadu Pollution Control Board, Pudukkottai office. The District Environmental Engineer thanked the Revenue Divisional Officer, Pudukkottai for presiding over the Public hearing meeting and the other Government Officials for attending the meeting and also he thanked the Proprietors of the stone quarries, Workers, Project Proponent, NGOs, Press reporters, Police officials, social activists and general public who were participated in the Public Hearing Meeting.

The meeting came to an end

Encl.:

1. Attendance sheet of the participants(A)
2. Project Proponent's power point presentation(B)
3. Video(CD) of the Public Hearing (C)
4. Draft of Environmental Impact Assessment Report and Executive Summary in Tamil and English (D)
5. Written Petition (E) - 10 Nos.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Pudukkottai.**

**Revenue Divisional Officer,**
**Pudukkottai.**

**புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், துளையனூர் கிராமம், திருமயம் - மதுரை ரோடு, தி/ள்.வர்ஷினி பேலஸ் திருமண மஹாலில் 30.10.2025 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்ற தி/ள். திருமதி. ச. அழகு உடைக்கல் குவாரி, விஸ்தீரணம் – 0.61.0 ஹெக்டேர், புல எண்: 543/3A, துளையனூர் கிராமம், திருமயம் வட்டம், புதுக்கோட்டை மாவட்டத்தில் நிறுவிடவும், இயக்கிடவும் உத்தேசித்துள்ளது. இத்திட்டத்திற்கான பொதுமக்கள் கருத்துக் கேட்டுணரும் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகள்.**

திட்டத்தின் பெயர் :

தி/ள். திருமதி. ச. அழகு உடைக்கல் குவாரி, விஸ்தீரணம் – 0.61.0 ஹெக்டர், புல எண். 543/3A, துளையனூர் கிராமம், திருமயம் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.

கூட்டத்தில் பங்கேற்ற அலுவலர்கள்:

1. செல்வி. B. ஐஸ்வர்யா,
   வருவாய் கோட்டாட்சியர்,
   புதுக்கோட்டை.

2. திரு. கு. செல்வகுமார்,
   மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   புதுக்கோட்டை மாவட்டம்.

3. திரு. பா. வரதராஜன்,
   வட்டாட்சியர்,
   திருமயம்.

4. திருமதி. S. சபிதா,
   வருவாய் ஆய்வாளர்,
   திருமயம் சரகம்.

5. திரு. K. ராஜகோபால்,
   காவல் உதவி ஆய்வாளர்,
   திருமயம் காவல் நிலையம்,
   திருமயம், புதுக்கோட்டை.

6. திரு. மு. வெங்கட சுப்ரமணியன்,
   உதவி பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   புதுக்கோட்டை மாவட்டம்.

7. திரு. து. அருண்குமார்,
   உதவி பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   புதுக்கோட்டை மாவட்டம்.

<u>திட்டம் சம்பந்தப்பட்ட பங்கேற்பாளர்கள் :</u>

1. திரு. கோபிநாத்,
   முதுநிலை சுற்றுசூழல் பொறியாளர்,
   ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட்,
   சென்னை.

**அரசு அலுவலர்கள், திட்ட முனைவோர் மற்றும் பொதுமக்கள் உட்பட மொத்தம் 69 நபர்கள் பங்கேற்றனர்.** (இணைப்பு – 'அ' வாயிலாக பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது).

தி/ள். திருமதி. ச. அழகு உடைக்கல் குவாரி, விஸ்தீரணம் – 0.61.0 ஹெக்டர், புல எண். 543/3A, துளையனூர் கிராமம், திருமயம் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், புதுக்கோட்டை அவர்கள் கீழ்க்கண்டவாறு வரவேற்புரை ஆற்றினார்கள்:</u>

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், புதுக்கோட்டை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு வருகை புரிந்து தலைமை தாங்க வந்திருக்கும் வருவாய் கோட்டாட்சியர், புதுக்கோட்டை அவர்கள் மற்றும் இக்கூட்டத்தில் பங்குபெற்ற வட்டாட்சியர், திருமயம் வட்டம், மற்ற வருவாய் துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், தி/ள். திருமதி. ச. அழகு உடைக்கல் குவாரி நிறுவன உரிமையாளர், திட்ட பிரதிநிதிகள், பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பின்னர், மத்திய சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகத்தின் 14.09.2006 அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி, சிலவகைத் திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு முன் பொதுமக்கள் கருத்துக் கேட்டுணரும் கூட்டம் நடத்தப்பட்டு பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவது அவசியமாகிறது. இது தொடர்பாக தினமலர் மற்றும் தி

நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ்களில் 18.09.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இன்று நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்டுணரும் கூட்டம் தி/ள். திருமதி. ச. அழகு உடைக்கல் குவாரி என்ற நிறுவனம் புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், துளையானூர் கிராமம், புல எண். 543/3A ஆகியவற்றில் 0.61.0 ஹெக்டேர் விஸ்தீரணத்தில் கல்குவாரி நிறுவிடவும், இயக்கிடவும் உத்தேசித்துள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் குறித்து பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டுப் பெறுவதற்காக இக்கூட்டம் நடத்தப்படுகிறது என தெரிவித்தார்.

மேலும், பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் இங்கு பதிவு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதலுக்குப்பின் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தெரிவித்துக் கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், தி/ள். திருமதி. ச. அழகு உடைக்கல் குவாரி நிறுவனத்தின் பிரதிநிதிகள் இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் பற்றி விவரித்தபின், பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ தெரிவிக்கலாம் என்று கூறினார்.

<u>வருவாய் கோட்டாட்சியர், புதுக்கோட்டை:</u>

வருவாய் கோட்டாட்சியர், புதுக்கோட்டை அவர்கள் அனைவரையும் வரவேற்று பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை தொடங்கி வைத்து இத்திட்டப் பிரதிநிதிகளைத் திட்டம் குறித்து விவரிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

<u>திட்டப் பிரதிநிதி:</u>

திரு. கோபிநாத், முதுநிலை சுற்றுசூழல் பொறியாளர், ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. அவர்கள் தி/ள். திருமதி. ச. அழகு உடைக்கல் குவாரி சார்பாக இத்திட்டம் குறித்தான விவரங்கள் வரைவு மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை நிழற்படம் (Power Point Presentation) மூலம் விரிவாக இக்கருத்து கேட்பு கூட்டத்தில் எடுத்துரைத்தார். இதன் விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு – 'ஆ')

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:</u>

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊர் விபரம் என்பதை தெரிவித்து அதன் பின்பு தங்களது கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்துவடிவிலோ பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

## பொதுமக்கள் கருத்து கேட்பு:

### 1. திரு. சுப்பிரமணியன், வலையன்வயல்

எனது பெயர் சுப்பிரமணியன். எனது ஊர் வலையன்வயல். இந்த கிராமத்தில் இந்த குவாரி இருந்தால் எங்களுக்கு வாழ்வாதாரம் கிடைக்கும் என்று நம்புகிறோம். மக்கள் எல்லோரும் வேலையில்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதனால் தயவு செய்து கல்குவாரி அமைத்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன் என தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

### 2. திருமதி. ஜெபக்கனி, சமூக ஆர்வலர், ராமநாதபுரம்

என்னுடைய பெயர் ஜெபக்கனி. நான் ராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து சமூக ஆர்வலராக வந்திருக்கேன். இந்த கருத்து கணிப்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைத்து அதிகாரிகளுக்கும் பொதுமக்கள் அனைவருக்கும், மகளிர்களுக்கும், சகோதர சகோதரிகளுக்கும் எனது அன்பான வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த கல்குவாரி அந்த கிராமத்தை சுற்றியுள்ள அனைவருக்குமே ஒரு வாழ்வாதாரத்தை உயர்த்த கூடியது. கல்வி, மருத்துவம், மின்சாரம் வசதி, குடிதண்ணீர் வசதி அனைத்துமே அந்த கிராமத்தில் இருக்கும் மக்களுக்கு அருமையான ஒரு வாழ்வாதாரத்தை உயர்த்த கூடியது என்ற இந்த கருத்துக்களை கூறி நான் இந்த கல்குவாரியை வரவேற்கிறேன் என்று கூறினார். அய்யா, அம்மா அவர்கள் சான்றிதழ் அளிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன் நன்றி வணக்கம் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

### 3. திரு. சுப்புராமையா, சமூக ஆர்வலர், திருப்பதி

என் பெயர் சுப்புராமையா. ரன்ஸ் என்ற அமைப்பை சார்ந்த சமூக ஆர்வலர், திருப்பதி. நாங்கள் நான்கு மாநிலங்களை பார்க்கின்றோம். தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்கள் பார்க்கின்றோம். இப்பொழுது வரையில் இந்த மாதிரி நாங்கள் எங்கேயும் பார்த்ததில்லை இது போன்ற கூட்டம் பார்க்கவில்லை. எத்தனையோ கூட்டம் பார்த்து இருக்கிறோம். இந்த அழகு கல்குவாரி மிகவும் நன்றாக சென்று கொண்டிருக்கிறது. நான் என்ன கூற வருகிறேன் என்றால், முதல் பிரச்சினை என்னவென்றால், சாலைகள், காற்று மாசுபாடு, தண்ணீர் பிரச்சனைகள், உடல்நல பிரச்சனைகள், கிராமப்புற மேம்பாடு செயல்கள், செய்தால் நன்றாக இருக்கும். முதலில் மூன்று மாதத்திற்கு ஒரு முறை மருத்துவ முகாம் நடத்தி, மருந்து கொடுத்து, மாசுபாட்டால் பாதிப்பு ஏற்படாதவாறு நன்றாக நடக்க வேண்டும் என்று கூறினார். பிறகு குடிதண்ணீர் மிகவும் முக்கியம். அந்த கிராமத்தில் சவ்வூடு பரவல் (RO) மூலம் குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து அவர்களுக்கு நல்லது செய்ய

வேண்டும். அதுபோல கிராமப்புற மேம்பாட்டிற்காக சமுதாய கூடம் அமைத்து அவர்களை ஊக்குவித்தல் நல்லது. அதேபோல பள்ளி குழந்தைகளுக்கு பேனா, புத்தகம் கொடுத்தால் நல்லது. அதேபோல குவாரிக்கு அருகில் உள்ள கிராமத்தை மற்ற கிராமங்களுக்கு எடுத்துக்காட்டு கிராமமாக செய்தால் நல்லது. ஆகவே, இந்த அழகு கல்குவாரிக்கு சீக்கிரம் அனுமதி கொடுக்க வேண்டும் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

4. திரு. சதிஷ், சமூக ஆர்வலர்

என் பெயர் சதீஷ். நான் ஒரு சூழலியல் காப்பாற்றும் செயலாளர். முன்னதாக, இந்த சபைக்கு வணக்கம். இந்த மேடையில் உள்ள அனைவருக்கும் வணக்கம். உங்கள் ஆச்சார விபரங்களை கலாச்சார சம்பிரதாயங்களை பார்த்துக்கொண்டு உங்கள் மனோபாவங்களை மதிக்கின்றேன். உங்கள் அபிப்ராயங்களுடன் நியாயமான பிரச்சினைகளை உங்களுடன் ஒரு மனதாக ஒப்புக்கொள்கிறேன். உங்கள் பிரச்சனைகளை உடனடியாக தீர்த்து வைக்கும்படி அரசாங்கம் இந்த உரிமத்தை எடுத்துக் கொண்டு நிலையான வளர்ச்சி உருவாக்குவதற்கு அதிகமான நிதியை உடனே வெளியே விட வேண்டும். உத்தியோகம், வேலை வாய்ப்பினை உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். அனைவருக்கும் அங்கு உள்ளவர்களுக்கு நிரந்தர வீடுகள் கொடுக்க வேண்டும் என்று அரசாங்க உயர் நிலை அதிகாரிகளுக்கு மிகுந்த தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஒரு சூழலியல் மற்றும் பசுமையுடன் நிலையாக இருக்க வேண்டும் என்று சூழலியல் காப்பாற்றும் செயலாளராக கேட்டுக்கொள்கிறேன். இந்த உரிமையாளர் அவர்களுக்கு மரங்கள் வளர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மரங்கள் வளருங்கள் அவற்றைக் காப்பாற்றுங்கள். இந்த உரிமையாளர் அவர்களுக்கு எவ்வித கட்டுப்பாட்டை விதிக்காமல் சூழலியல் அனுமதியை உடனடியாக கொடுக்க வேண்டும் என்று அரசாங்க உயர்நிலை அதிகாரிகளுக்கு மிகுந்த தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி வணக்கம் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை தெரிவித்துக்கொண்டார்.

5. திரு. முத்துக்குமார், பெரியகல்வயல்

என் பெயர் முத்துக்குமார். பெரியகல்வயல். நான் வந்து ஒரு ஏழ்மையான குடும்பத்தில் இருந்து வந்துள்ளேன். இருந்தாலும் இந்த கல்குவாரி வந்தால் எங்களுக்கு ஒரு வீடு கட்டுவதற்கு உதவியாக இருக்கும். இங்கு கல்குவாரி வந்தால் எங்களுக்கு மண் மணல் வாங்குவதற்கு வசதியாக இருக்கும். ஏனென்றால், வெளியில் இருந்து இறக்குவதால் மிகவும் அதிக விலைக்கு இறக்குவதாக உள்ளது. ஒரு வீடு கட்டுவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. என்னை போல் ஒரு இளைஞர்

வெளிநாட்டுக்கு சென்று சம்பாதிக்கும் நிலைமை உள்ளது. இங்கு ஒரு தொழில் இருந்தால் இங்கே இருந்து குடும்பத்துடன் சந்தோஷமாக வேலை செய்து கொள்வோம். எனவே, தாழ்மையுடன் கல்குவாரியை அனுமதிக்குமாறு மிக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

6. திருமதி. பத்மா தேவி, வலையன்வயல்

எனது பெயர் பத்மாதேவி. நான் வலையன்வயல் ஊரிலிருந்து வருகிறேன். எனது கணவர் ஆரம்பத்தில் இருந்து கல்குவாரியை வைத்து தான் குடும்பத்தை நடத்தினார். இப்பொழுது எனது பிள்ளைகளுக்கு பள்ளி கட்டணம் கட்ட முடியாத அளவிற்கு சூழ்நிலையால் மிகவும் கஷ்டப்படுற குடும்பமாக உள்ளோம். எங்களுக்கு கல்குவாரி அனுமதி வழங்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

7. திருமதி. அழகம்மாள், வலையன்வயல்

நான் வலையன்வயல் அழகம்மாள் பேசுகிறேன். நாங்கள் கல்குவாரியை வைத்து தான், அந்த வேலைக்கு போய் தான், எங்க வீட்டுக்காரர் இறந்து விட்டார். நாங்கள் அந்த கல்குவாரியில் வேலை பார்த்து தான் நாங்கள் பிழைத்து வந்தோம். இந்த கல்குவாரி ஏழு எட்டு மாதங்களாக நிறுத்தி வைத்துள்ளதால் மிகவும் சிரமப்படுகிறோம், மிகவும் கஷ்டப்படுகிறோம். பிள்ளைகள் எல்லாம் சிரமப்படுகிறோம். வாய் பேசாத பெண்ணை வைத்துக்கொண்டு சிரமப்படுகிறோம். எங்களுக்கு ஏதாவது பார்த்து வேலை கொடுத்தால் தான் நாங்கள் பிழைக்க முடியும். வேற வழியே இல்லை. இந்த குவாரியை எடுத்துக் கொடுத்தால் தான் நாங்கள் வீடு கட்டவோ, மண்ணுக்கோ, கல்லுக்கோ வீடு இன்னும் கட்டவில்லை. மிகவும் வசதி குறைவா இருக்கிறோம். நீங்கள் பார்த்து என்ன முயற்சி எடுக்கிறீர்களோ அதை எடுங்கள் எங்களுக்கு கல்குவாரி அமைத்து தர வேண்டும் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

8. திரு. முத்துசாமி, பரளி

என் பெயர் முத்துசாமி. நான் பரளி. எங்கள் ஊரை சுற்றி 20 கிராமங்கள் இருக்கிறது. இந்த 20 கிராமங்களும் இந்த குவாரி ஆரம்பித்தால் ஒரு 200 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அது போல எங்கள் ஊரை சுற்றி, துளையனூரை சுற்றி பத்து ஊர் இருக்கிறது. எல்லோரும் லாரி வைத்திருக்கிறோம். இப்போ இந்த லாரிகள் எல்லாம் ஒரு குவாரியும் இல்லாமல் சும்மா தான் நிற்கிறது. அதனால் இந்த குவாரி ஆரம்பித்தால் எல்லோருக்கும் வாழ்வாதாரம் கிடைக்கும். அது மாதிரி எந்த கிரஷருமே இந்த பகுதியில் எதுவுமே கிடையாது. ரொம்ப தூரத்திற்கு 30

கிலோமீட்டர் போய் தான் ஜல்லி மணல் வாங்கி வருகிறோம். இந்த இடத்தில் குவாரி அமைந்தால் கிரஷர் எல்லாம் இயங்கும். எல்லோருக்கும் வாழ்வாதாரம் கிடைக்கும். அதனால், இந்த குவாரி எங்களுக்கு வேண்டும் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

9. திரு. அஜ்ரத், சமூக ஆர்வலர்

என் பெயர் அஜ்ரத், சமூக ஆர்வலர் அழகு உடைக்கல் குவாரிக்கு அனுமதி கொடுக்கவேண்டும் நன்றி வணக்கம் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

10. திருமதி. காந்தி. துளையனூர்

என் பெயர் காந்தி. நான் துளையனூரில் இருந்து வருகிறேன். நான் டீக்கடை வைத்து நடத்திக் கொண்டிருக்கிறேன். கடை நடத்தும்போது ஆட்கள் எல்லாம் நிறைய வருவார்கள். பொருளாதார வசதி நள்றாக இருந்தது. கடைக்கு நல்ல ஆட்கள் வந்துகொண்டு இருந்தார்கள். இப்பொழுது இந்த கல்குவாரி இல்லாததால் கடையெல்லாம் நடத்த முடியவில்லை. மக்களெல்லாம் மிகவும் சிரமத்திற்கு ஆளாகிவிட்டார்கள். நீங்கள் கல்குவாரி நடத்தும்படி ஆதரவு கொடுத்தீர்கள் என்றால் ரொம்ப நன்றியாக போகும் என்று தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

11. திரு. ராமசாமி, கோனாபட்டு

வந்திருக்கக்கூடிய வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கும் வணக்கம். என் பெயர் ராமசாமி. என்னுடைய ஊர் கோனாபட்டு. நான் 2005 ஆம் வருடத்தில் இருந்து 17 வருடங்களாக நான் கல்குவாரிகளிலும் கிரஷர்களிலும் வேலை பார்த்து தான் என் குடும்பத்தை நான் நடத்திக் கொண்டிருக்கிறேன். இப்பொழுது ஒரு பத்து பதினொரு மாதங்களாக கல்குவாரிகள் துளையனூர் பஞ்சாயத்தில் இயங்காமல் இருப்பதின் காரணத்தால் என்னுடைய வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு வந்திருக்கும் அதிகாரி அவர்கள் மற்றும் திருமயம் பொது மக்களின் மனதை கருதியும் துளையனூர் பஞ்சாயத்து, கல்லுவயல், வளையவயல், கோனாபட்டு, வெங்களூர் மற்றும் சுற்றுவட்டாரத்தில் உள்ள பல 15 ஊர் பொதுமக்களும் மிகவும் வறுமை கோட்டிற்கு கீழே தங்கியுள்ள காரணத்தினால், இந்த கல்குவாரியை வைத்து தான் எல்லோரும் வாழ்வாதாரத்தில் முன்னேறி வந்தார்கள். தற்போது எந்த ஒரு உழைப்பும் இல்லாமல் மிகவும் அடி மட்டத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்கள். கிரஷர்கள் இயங்குவதில்லை. இங்கு உள்ள மலை அடிகளும் கல்குவாரிகளும் இயங்காத காரணத்தினால் கிட்டத்தட்ட 250, 300 குடும்பங்களின் வாழ்வாதாரம் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த கல்குவாரி உரிமையாளர்களுக்கு தாங்கள்

கல்குவாரி அமைக்க அனுமதி தர வேண்டுமென்று நான் மிகவும் வேண்டி கேட்டு கொள்கின்றேன் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

12. திரு. முத்துராமன், வலையன்வயல்

எனது பெயர் முத்துராமன், வலையன்வயல். எனக்கு வேலை இல்லை, மலையடி இல்லாததினால் வேலை வாய்ப்பு இல்லை மிகவும் சிரமப்படுகிறோம் டீ குடிக்க கூட வழி இல்லாமல் இருக்கிறோம். அதனால் கல் குவாரி இயக்குவதற்கு எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை நன்றி என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

13. திருமதி. பார்வதி, துளையனூர்

எனது பெயர் பார்வதி. நான் துளையனூர் கிராமத்தைச் சேர்ந்தவள். இந்த கல்குவாரி இயங்கினால் கட்டாயம் சுற்றியுள்ள மக்கள் அனைவரும் நல்ல பலனை அடைவார்கள் என்று நான் நம்புகிறேன். அதனால், கல்குவாரி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

14. திரு. ராமச்சந்திரன், சமத்துவபுரம்

என் பெயர் ராமச்சந்திரன். நான் சமத்துவபுரத்தில் வசிக்கிறேன் இந்த குவாரியை நம்பி கிட்டத்தட்ட 40 குடும்பங்கள் இருக்கிறது. மிகவும் கஷ்டத்தில் இருக்கிறோம். தயவு செய்து அதுக்கு அனுமதி கொடுக்குமாறு மாவட்ட ஆட்சியர் அம்மா அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன் நன்றி என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

15. திரு. எஸ்.எஸ்.மணி, பெரியார் சமத்துவபுரம்

என் பெயர் எஸ்.எஸ்.மணி. பெரியார் சமத்துவபுரம். நான் சமத்துவபுரத்தில் உணவகம் வைத்திருக்கிறேன். உணவகத்தில் கல்குவாரி இல்லாமல் இருப்பதால் உணவக தொழில் மிகவும் பாதிப்பு உள்ளது. தயவு செய்து கல்குவாரிக்கு அனுமதி கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்

சிறிது நேரம் யாரும் கருத்து தெரிவிக்காததால் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் பொதுமக்களை நோக்கி உங்களுடைய கருத்துக்களை தெரிவிக்க தான் இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்படுகிறது. எனவே, பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அதன் பிறகு

யாரும் கருத்துகளை பதிவு செய்யவில்லை. பின்பு பொதுமக்கள் யாரும் கருத்து தெரிவிக்க முன்வராததால் கூட்டத்தினை முடித்து வைப்பதாக தெரிவித்தார்.

**நன்றியுரை:**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எழுத்துவடிவில், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலோ அல்லது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் புதுக்கோட்டை அலுவலகத்திலோ சமர்பிக்கலாம் என்று தெரிவித்துக் கொண்டார். தி/ள். திருமதி. ச. அழகு உடைக்கல் குவாரி பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்திய வருவாய் கோட்டாட்சியர், புதுக்கோட்டை அவர்களுக்கு நன்றி கூறினார். இதர வருவாய் துறை அதிகாரிகள், கல்குவாரி நிறுவன உரிமையாளர்கள், திட்ட பிரதிநிதிகள், பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள், காவல்துறை அதிகாரிகள், பத்திரிக்கை நிருபர்கள் மற்றும் கலந்துகொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியினை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தெரிவித்துக்கொண்டார்.

கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**இணைப்பு:**

1. கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் வருகை பதிவேடு (அ).
2. திட்ட பிரதிநிதிகளின் நிழற்பட விளக்க உரை (ஆ)
3. கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்த வீடியோ குறுந்தகடுகள் (இ).
4. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவு விரிவான அறிக்கை மற்றும் தமிழ், ஆங்கிலத்தில் திட்ட சுருக்க உரைகள் (ஈ).
5. எழுத்து வடிவில் பெறப்பட்ட பொதுமக்களின் கருத்துக்கள்(உ) - 10 எண்ணிக்கை

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
புதுக்கோட்டை.

வருவாய் கோட்டாட்சியர்,
புதுக்கோட்டை